# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,
# திருவல்லிக்கேணி, சென்னை–5

மின்னஞ்சல்: parthasarathy@tnhrce.com
வலைதளம்: www.sriparthasarathytemple.tnhrce.in
தொலைபேசி எண்:– 2844 2462

## பணியிடம் நியமனம் செய்ய விண்ணப்பம் வரவேற்பு

## ந.க. எண்.312/2018 அ2 நாள் 06.05.2018

திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயிலில் கீழ்கண்ட பணியிடம் புதிதாக தேர்வு செய்யப்பட உள்ளது. இப்பணியிடத்திற்கு இந்து சமயத்தினை சேர்ந்த தகுதி உள்ள நபர்களிடமிருந்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

விண்ணப்பங்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 10.06.2018 மாலை 5.00 மணி வரை

| வ. எண் | பதவியின் பெயர் | காலியிடம் எண்ணிக்கை | சம்பள விகிதம் | தகுதிகள் |
|---|---|---|---|---|
| 1. | மின் பணியாளர் | 1 | **4100–12300 + 1900 P.B.8** | 1. மின் பணியாளர் பணியிடத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் 10 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>2. தமிழ்நாடு தொழில் தொழில் பயிற்சி நிறுவனம் / அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களிடமிருந்து மின் பணிகள் தொடர்பான கல்வியில் (I.T.I. Electrician) சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும்.<br>3. Tamilnadu Electrical Licencing Board மூலம் வழங்கப்படும் "H"அல்லது "B" உரிமம் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க வேண்டும். |

### தகுதிகள்
### நிபந்தனைகள்

1. விண்ணப்பதாரர் இந்து மதத்தை சேர்ந்தவாராக இருத்தல் வேண்டும். அவரது சாதிசான்றிதழின் உண்மை நகலில் அரசு அலுவலரால் ஒப்பமிட்டு இணைக்கப்பட வேண்டும்.
2. தமிழில் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.
3. விண்ணப்பதுடன் உரிய சான்றிதழ்கள் இணைத்து அனுப்ப வேண்டும்.
4. இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 56 மற்றும் 116(2) (xxiii)–ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதி எண்.3,4,12 மற்றும் 13–ல் தெரிவித்த தகுதிகள் இல்லாதவர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.
5. துணை ஆணையர்/செயல் அலுவலர், அருள்மிகு பார்த்தசாரதிசுவாமி திருக்கோயில், திருவல்லிக்கேணி, சென்னை – 5 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.
6. திருக்கோயிலின் ஆகம விதிகளுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் உட்பட்டு நடப்பவராகவும் இருக்க வேண்டும்.
7. தொழுநோய் மற்றும் அருவருக்கத்தக்க நோய் உள்ளவர்கள் அல்லது மனநிலை குறைப்பாடுகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள். நல்ல தேக ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும்.
8. எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டனை பெற்றவராகவோ கடன் கொடுக்க இயலாமல் நொடித்தவர்கள் என நீதிமன்றத்தில் தீர்பளிக்கப்பட்டவராகவோ இருத்தல் கூடாது.
9. அரசு, அரசு சார்பு நிறுவனங்கள் மற்றும் திருக்கோயில்களில் பணிபுரிந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு பணிநீக்கம் செய்யப்பட்டவராகவோ திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு நடத்தியவராகவோ இருக்க கூடாது.

10. விண்ணப்பிக்க தகுதி உள்ள நபர்கள் அறிவிப்பில் குறிப்பிட்ட மாதிரி படிவத்தின்படி கைப்பட எழுதியோ அல்லது தட்டச்சு செய்தோ சொந்த செலவில் அனுப்பி வைக்க வேண்டும்.
11. கல்வி தகுதி மற்றும் விண்ணப்பித்திற்கான சான்றுகள் அனைத்தும் நகல்களில் அரசு பதிவு பெற்ற அலுவலரால் சான்றொப்பமிட்டு இணைத்து அனுப்ப வேண்டும். அசல் சான்றுகள் கண்டிப்பாக இணைக்கக் கூடாது.
12. விண்ணப்பங்கள் பதிவு தபாலில் அனுப்ப வேண்டும். நேரில் கொடுக்கும் விண்ணப்பங்கள் ஒப்புதல் பெற்றுக் கொள்ள வேண்டும்.
13. விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அனுப்பும் கடைசி நாள் 10.06.2018 மாலை 5.00 மணி வரை குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் இவ்வறிவிப்பு நாளாகிய 06.05.2018 தேதிக்கு முன்னதாக வரப்பெற்ற விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
14. விண்ணப்பம் செய்வோர் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தின்படி விண்ணப்பிக்க வேண்டும். திருக்கோயில் நிர்வாகம் தேவை என கருதும் விவரங்களை விண்ணப்பதாரர் அளிக்க கடமைபட்டவராவார்.
15. தகுதி உள்ள நபரை தேர்வு செய்வதில் திருக்கோயில் நிர்வாகத்தின் முடிவே இறுதியானது.
16. தேர்வு செய்து நியமனம் செய்வது இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாகும்.
17. இந்த பணியானது முழு நேரம் பணியாகும்.
18. குறிப்பிட்ட தேதிக்குள் உரிய படிவத்தில் தேவையான இணைப்புகள் மற்றும் சான்றுடன் வரப்பெறாத விண்ணப்பங்கள் தகுதியற்றவை என நிராகரிக்கப்படும். தகுதியின்மையை கொண்ட விண்ணப்பங்கள் காரணம் கூறாது நிராகரிக்கப்படும்.
19. விண்ணப்பம் செய்ததாலேயே எந்த ஒரு விண்ணப்பதாரரும் தேர்வு செய்யப்பட்டதாக கருதக் கூடாது.
20. அரசு விதியில் உள்ளப்படி விண்ணப்பதாரரின் வயது வரம்பு 30.4.2018 அன்று 18 வயது பூர்த்தி அடைந்தவர்களாகவும், 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
21. மேலும் விபரங்கள் மற்றும் நிபந்தனைகள் பதிவுயிறக்கம் செய்ய திருக்கோயில் வலைதலைத்தில் www.sriparthasarathytemple.tnhrce.in காணலாம்.
22. இணைக்கப்பட வேண்டிய சான்றுகளின் சான்றிடப்பட்ட நகல்கள்
    1. வயது
    2. கல்வித் தகுதி மற்றும் தொழில் நுட்ப சான்றிதழ்
    3. சாதி சான்றிதழ்
    4. சிறப்புத் தகுதி சான்றிதழ்கள்
    5. முன் அனுபவம் சான்றிதழ்கள் (ஏதேனும் இருப்பின்)
    6. நன்னடத்தை சான்று அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடமிருந்து 30.04.2018 க்கு பிறகு பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரருக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டதும் பணியில் சேரும் முன் உடற்தகுதி சான்று அரசு பதிவு பெற்ற மருத்துவரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்கண்ட நியமனங்கள் அனைத்தும் தமிழ்நாடு இந்து சமய அறநிலைய கொடைகள் சட்டம் 1959 (தமிழ்நாடு சட்டம் 22/1959) பிரிவு 55 மற்றும் அதனை ஒட்டி வெளியிடப்பட்ட பிரிவு 116(2) (xxiii)ல் உள்ள விதிமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

ஒம்/– மு.ஜோதிலட்சுமி,
உதவி ஆணையர்/சரிபார்ப்பு அலுவலர்
துணை ஆணையர்/செயல் அலுவலர்(கூ.பொ)

/உண்மை நகல்/உத்தரவுப்படி/

மேலாளருக்காக.

வ.எண்:—

# அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்,
# திருவல்லிக்கேணி, சென்னை—5.

## மின்பணியாளர் பணிக்கான
## விண்ணப்ப படிவம்

Photo
size

| | | |
|---|---|---|
| 1. | விண்ணப்பதாரர் பெயர் | |
| 2. | தந்தை பெயர் | |
| 3. | நிலையான முகவரி | |
| 4. | தொடர்புக்கான<br>தொலைபேசி/கைபேசி எண் | |
| 5. | தேசிய இனம் | |
| 6. | சமயம் | |
| 7. | சாதி | |
| 8. | பிறந்த தேதி மற்றும் வயது | |
| 9. | கல்வித்தகுதி | |
| 10. | விண்ணப்பிக்கும் பதவிக்கான<br>சிறப்புத்தகுதிகள் | |
| 11. | முன் அனுபவம் | |
| 12. | நன்னடைத்தை சான்று அளித்தவர்<br>பெயர், தகுதி, முகவரி | |

மேற்குறித்த விவரங்கள் அனைத்தும் உண்மையானவை என உறுதி அளிக்கிறேன்.

இடம்:

நாள்:

விண்ணப்பதாரர் கையொப்பம்